மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் 72 | 02.06.2023 (வெள்ளிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு ரூ.30.00

## “அரச பயங்கரவாதத்தை தக்கவைக்கும் கலாசாரமே தொடர்கிறது”

ஊடகங்களின் ஊடாக வெளிக்கொணரும் உண்மைகளை மூடி மறைப்பது தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் இருப்புக்கு தேவைப்படும் முக்கிய விடயமாகும்.

அந்த இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு வகையானசட்ட மூலகங்களை உருவாக்கி கொள்ள முயற்சிக்கிறது. அதனை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் ஜனநாயக விரோத மற்றும் அரச பயங்கரவாதத்தை தக்க வைக்கும் கலாசாரத்தையே அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் தொடர்பில்

3ம் பக்கம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுக்கும் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு இல்லை என்பது பகிரங்கப்படுவதாக சுரேஷ் தெரிவிப்பு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே தமிழ்த் தேசியத்திற்காக போராடும் கட்சி என தெரிவித்து வருகின்ற நிலையில், அவர்கள் தற்போது முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு இல்லை என்ற விடயம் பகிரங்கப்படுவதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதமேந்தி போராட்டம் நடத்திய தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத் திற்காக நிற்கின்ற நிலையில்,

3ம் பக்கம்

# குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிப்போம்

## யாழ்.நூலக எரிப்பின் நினைவேந்தலில் சிவாஜிலிங்கம் சூளுரை

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் காலை 9.30 மணியளவில் பொதுசன நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்கு காரண கர்த்தாவாக



விளங்கிய செல்லப்பாவுக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் குறித்த நினைவேந்தலில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த

3ம் பக்கம்

## பயங்கரவாத தடைச் சட்டத்தினை நிறைவேற்றாமல் தடுக்க வேண்டும் வவுனியாவில் உறவுகள் போராட்டம்



பயங்கரவாத தடைச் சட்டத்தினை நிறைவேற்றாமல் இருக்க அனைவரும் ஒன்றுகூட வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே வவுனியா மாவட்ட

3ம் பக்கம்

## கடற்றொழிலாளர் சமூகத்தை சந்திக்க பின்னடிக்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதியை சந்திப்பதற்காக மூன்று தடவை மகஜர் அனுப்பியும் எந்தவித அழைப்பும் இதுவரை இல்லை என வடமாகாண கடற்றொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதி அன்னலிங்கம் அன்ராசா தெரிவத்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஆறு மாதங்களுக்குள் மூன்று தடவைகள் எம்மால் மூன்று மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளது. அதில் முதலாவது மகஜர் யாழ்ப்பாண விகாராதிபதி ஊடாக அனுப்பியிருந்தோம்.

அதனை தொடர்ந்து வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஊடாக மகஜரை அனுப்பியிருந்தோம், அதற்கும் எந்த விதமான அழைப்பு ஜனாதிபதியிடமிருந்து சந்திப்பதற்கான அழைப்பும் இதுவரை கிடைக்கவில்லை.

நாங்கள் வட

3ம் பக்கம்

# மத சுதந்திரத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ஞானசார தேரரையும் கைது செய்ய வேண்டும் என்கிறார் சந்திரிக்கா

இலங்கையின் மதச்சுதந்திரத்தை பாதிப்பிற்குள்ளாக்கியவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் அண்மை நாட்களில் பலர் கருத்துக்களை வெளியிட்டிருந்த நிலையிலேயே, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதனை தமது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பௌத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அண்மையில் நகைச்சுவை கலைஞர் நதாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டிருந்தார்.



நதாஷாவை கைது செய்த தற்போதைய இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் கிறிஸ்தவ, முஸ்லீம் மற்றும் சைவ மதங்களை அவமதித்த, ஆலயங்களை எரித்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரையும் கைது செய்ய வேண்டும். நதாஷ ாவை விட கொடூரமான முறையில் இலங்கையில் உள்ள ஏனைய மதங்களை அவமதித்த ஞானசார தேரர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். பௌத்த மதத்தை மதிக்க வேண்டுமென்பது உண்மையாக இருந்தாலும் அதே மரியாதை ஏனைய மதங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அத்துடன், இலங்கை பிரஜைகளுக்கு தங்களுக்கு விருப்பமான மதத்தை பின்பற்ற முழு உரிமையும் உண்டு வைத்தியர் ஷாபி ஷி ஹாப்தீனுக்கு எதிராக போலி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவருக்கு அவப்பெயர் வரவழைத்த தரப்பினருக்கு எதிராகவும் இலங்கை ஜனாதிபதி சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் மதங்களை அவமதித்தவர்கள் உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்குவதன் மூலம் உண்மையான ஜனநாயகத்தை இலங்கையில் நிலைநாட்ட முடியும் என சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

# ஊழல் மோசடிகளுக்கு புதிய ஆளுநர் இடமளிக்கக் கூடாது: – சாணக்கியன் வலியுறுத்து



ஊழல், மோசடிகளற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் தனது தலைமையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலில் புதிய ஆளுநருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த காலங்களில் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் அனைத்துமே பல சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆளுநரின் செயற்பாடுகள் மிகவும் மோசமானவையாகவே காணப்பட்டன.

அதனால் அனைத்து கூட்டங்களுமே சர்ச்சைக்குரியவைகளாகக் காணப்பட்டன. அந்தக் காலத்தில் பல ஊழல், மோசடிகளும் இடம்பெற்றிருந்தன.

அதற்குச் சில அரசியல்வாதிகளும் உடந்தையாக இருந்தனர். சில அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்காத தீர்மானங்களை எடுத்த தீர்மானங்களாக அறிவிக்கப்பட்ட நிலைமைகளும் காணப்பட்டன.

மக்களுடைய தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமல் தங்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிலரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

பல கூட்டங்களில் நாம் எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தோம். அந்த நேரத்தில் எம்மைக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்குக் கூட அனுமதிக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

சில சந்தர்ப்பங்களில் சிறிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் கூட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் தலையீடு அல்லது சிபாரிசுடன் முன்னெடுக்க வேண்டிய நிலைமைகளும் காணப்பட்டன.

இவற்றைத் தட்டிக் கேட்கும் அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன.

எனினும், தற்போது பதவியேற்றுள்ள ஆளுநர் இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு ஊழல், மோசடிகளுக்கு எதிராகச் செயற்பட்டால் அவரது நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளோம்.

மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்படும் அரசியல் தலையீடுகள் மற்றும் ஊழல், மோசடிகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆளுநருடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

# மகாவலி ஜே வலயத்துக்குத் தகவல்களை வழங்க வேண்டாம்: ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் 'ஜே' வலயத்துக்குக் கோரப்பட்டுள்ள தகவல்களைப் பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள் வழங்கக் கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஊடாக 'ஜே' வலயத்தை முன்னெடுப்பதற்குரிய தரவுகள் அதன் கீழ் உள்ளடங்கும் பிரதேச செயலர்களிடம் கோரப்பட்டிருந்தன. 37 கிராம அலுவலர் பிரிவுகள் இதன் கீழ் உள்ளடங்குகின்றன.

இந்த விடயம் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மகாவலி 'எல்' வலயத்துக்கு ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்து ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வலயத்துக்கு முல்லைத்தீவின் 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கியிருந்தன.

இந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அதன் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே மகாவலி 'ஜே' வலயத்துக்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதாகவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோதராதலிங்கம், கு.திலீபன், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## "அரச பயங்கரவாத...

ஊடகவியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஊடகங்களின் ஊடாக வெளிக்கொணரும் உண்மைகளை மூடி மறைப்பது தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் இருப்புக்கு தேவைப்படும் விடயமாகும்.

இவர்கள் அங்கீகாரமில்லாத தரப்பு மற்றும் ஜனநாயகத்துக்கு விரோதமாக செயல்படும் தரப்பு என மக்களால் விமர்சிக்கப்படும் அரசாங்கமாகும்.

இந்நிலையில் குறித்த தரப்பினரின் இருப்பு என்பதே ஒரு மோசடியாகும். இந்த மோசடிக்காரர்கள் தங்களுடைய அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள எப்படியாவது உண்மைகளை மூடி மறைக்க வேண்டும். அதில் ஒன்று தான் தற்போது ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் சட்ட மூலமாகும்.

முன்னதாக அவர்கள் பயங்கரவாத சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தி வந்தனர். இருப்பினும் சர்வதேசத்தின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அந்த சட்டத்தை நீக்கி புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் எனும் பெயரில் அதேபோன்றதொரு சட்டமூலத்தை கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள்.

குறித்த சட்ட மூலமும் பாரதூரமானது. அது ஊடகங்களை குறி வைத்து உருவாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் தற்போது ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவை நிறுவி சட்டமூலம் தயாரிப்பு என்பது ஊடகங்களையும்,சில உண்மைகளையும் வெளிக்கொணரும் ஊடகங்களையும் முன்கூட்டியே இனங்கண்டு, ஊடகங்களை சுற்றிவளைத்து, அவற்றின் தகவல்களை பறித்து, இந்த ஊடகங்களுக்கு தகவல் வழங்கும் தரப்பினர்களையும் அடையாளங்கண்டு,அவர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு தீர்மானித்துள்ளார்கள்.

ஜனநாயகத்தை நிலைநாட்டும் போர்வையில் இவ்வாறான பயங்கரமான சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள்.

இவை அனைத்தும் ஜனநாயக விரோத மற்றும் அரச பயங்கரவாதத்தை தக்க வைக்கின்ற கலாசாரத்தையே அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கிறது என்றார்.

## தமிழ்த் தேசிய...

தாங்கள் மாத்திரமே அதற்காக பாடுபடுவதாக மக்கள் முன்னணியினர் தெரிவித்து வருவதாக சுரேஷ் பிறேமச்சந்திரன் ஐ.பி.சி தமிழுக்கு சுட்டிக்காட்டினார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

சிங்கள பௌத்த மேலாதிக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள அரசாங்கம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக பல விடயங்களை செய்து வருகிறது.

அதில் முக்கியமாக இராணுவ உதவியின் பேரில் பௌத்த விகாரைகளை அமைப்பது, தமிழர் நிலங்களை கபளீகரம் செய்வது, சிங்கள மக்களை குடியேற்றுவது என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் காணப்படும் விடயங்கள் ஆகும்.

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டங்கள் தற்போது இடம்பெறுகிறது. குறித்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சார்ந்த மூவர் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

குறித்த போராட்டத்தைப் பார்க்கும் பொது மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

காரணம், மக்களையும், அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் போது அரசு குறித்த போராட்டத்தின் தன்மையை பார்க்க கூடும்.

ஆனால் தற்போது இந்தப் போராட்டம் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விடயமாகக் கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக இந்தப் போராட்டதை நடத்துபவர்கள் மாத்திரம் தமிழ் தேசியத்தை காப்பாற்றுபவர்கள் என்றும் ஏனையவர்கள் துரோகிகள் என்ற பார்வை அவர்களுக்கு இருக்கிறது.

ஆனால் இந்தப் போராட்டத்தின் மூலம் சிங்கள மக்கள் மத்தியில், மக்கள் ஆதரவு இல்லை என்ற எண்ணம் தோன்றக்கூடும். ஆகவே இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு குறித்த போராட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

## குற்றவாளிகளை...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் - இலங்கைப் பொலிஸாரினாலும், சிங்கள இன வெறிக் காடையர்களினாலும் யாழ்ப்பாணம் பொது நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டு, சுமார் ஒரு இலட்சம் புத்தகங்களும் அரிய ஓலைச் சுவடிகளும் அழிக்கப்பட்ட 42 ஆவது ஆண்டு நினைவு நாள் ஆகும்.

ஈழத் தமிழ் இனப் படுகொலை, கட்டாயமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டவை உட்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்காக குற்றவாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிப்போம் என்று இதன் போது தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து பொதுசன நூலகத்தில் பிரதம நூலகர் ராகினி நடராஜ் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் யாழ் மாநகர சபையின் ஆணையாளர் ம.ஜெயசீலன் நூலக ஊழியர்கள், வாசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி வன்முறைக் குழுவொன்றினால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், பழமையான ஏடுகள் என்பவை பெரும்பான்மை இன வன்முறை கும்பலால் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

குறித்த நூலகமே தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாத...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்க செயலாளர் சிரேஸ்ட. ஜெனிட்டா இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், "பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதானது தமிழ் மக்களுக்கு ஜனநாயக போராட்டத்தை பாதுகமாக்கும் என்பதற்காகவும் எமது உரிமைகளை கேட்க முடியாத நிலை ஏற்படும் என்பதற்காகவும், இந்த புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற கூடாது என்பதை கேட்டுக்கொள்கின்றோம்.நாம் இன்று ஜனநாயக முறையிலும் அகிம்சை வழியிலும் போராட்டத்தை முன்னெடுக்கிறோம்.

இந்நிலையில் இந்த அரசாங்கமானது பயங்கரவாத தடைச்சட்டத்தினை எடுப்பதாக கூறி புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டுவர இருக்கிறது. இதனால் எமது ஜனநாயக போராட்டத்தில் கருத்து சுதந்திரம், போராடும் சுதந்திரம் எமக்கு கிடைக்காது என்பதனால் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட அனைவரிடம் கேட்கிறோம் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தினை நிறைவேற்றாமல் இருக்க அடிகோல வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## கடற்றொழிலாளர் ...

மாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்கள் ஒன்றிணைந்து எங்களுடைய வடமாகாண மீனவர்களுடைய பிரச்சனைகளை முன்வைத்து வருகிறோம். பிரச்சனைகளை தெளிவுபடுத்தி வருவதோடு எங்களுடைய கோரிக்கைகளையும் முன்வைத்து வருகிறோம். அந்த வகையிலே பருத்தித்துறை பிரதேசத்திலேயே வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சனைகள் தொடர்பாக எங்களுடைய ஜனாதிபதி அவர்களுக்கு மூன்றாவது மகஜராக நாங்கள் பருத்தித் துறையை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு 2023 ஆம் ஆண்டு நாலாம் மாதம் பருத்தித்துறை பிரதேச செயலர் ஊடாகவும் மகஜர் அனுப்பியிருந்தோம். அதற்கும் இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

வடக்கு கடற்றொழில் சமூகம் மிகப் பெரும் ஆபத்துகளையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருவதாக அதில் அனுப்பி இருந்தோம். ஆனால் இதுவரை எவற்றிற்கும் ஜனாதிபதி பதிலளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆ்ப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
**021 222 7557 / +94 76 567 3339**

**தேசியம் பத்திரிகையில் கதைகள் பேசும் பக்கத்திற்கு சிறந்த புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகிறது... நீங்கள் எடுத்த சிறந்த படங்களை எங்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் பெயருடன் அனுப்பி வையுங்கள்..**
**+94 76 567 3339**

தேசியம்
www.thesiyamnews.com THESIYAM

# மத குரோதங்களை வியாபாரமாக்கும் அரசியல்வாதிகள்
# சர்வமத தலைவர்கள் கூட்டாக குற்றச்சாட்டு




அரசியல்வாதிகள் மத குரோதங்களை அரசியல் வியாபார பொருளாக்கி அரசியல்லாபம் தேடுவதாக சர்வமத தலைவர்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

தேசிய சர்வமத போரவையால் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற சர்வமத தலைவர்களின் ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த எஸ். சிவலோகநாத குருக்கள்,

ஒருசில சுயநலம் கொண்ட மத தலைவர்களும் அரசியல்வாதிகளும் நல்லிணக்கத்தினை குழப்பக்கூடிய விடயங்களை பெரிதாக்கி வருகின்றனர். இது மிகப்பெரும் கவலைதரும் விடயம். சில அரசியல்வாதிகளும் இந்த மத குரோதங்களை அரசியல் வியாபார பொருளாக்கி அதன் மூலம் அரசியல் லாபம் தேடுகின்றனர். வடக்கில் அரசாங்கத்திற்கு சார்பான தொல்பொருள் திணைக்களத்திற்கு கூறக்கூடிய விடயம் பூர்வீக தொல்லியல் இடங்கள் என தெரிவித்தால் இந்து சமயத்திலும் பல இடங்கள் இருப்பதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அதேபோல் பௌத்த மதத்திலும் உள்ளது.

அவற்றையெல்லாம் கூறப்போனால் பல இடங்களில் பல ஆலயங்களை அமைக்க வேண்டி வரும். நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டி வரும். அவை தற்போதுள்ள மத நல்லிணக்கத்திற்கு குரோதமாகவே அமையும்.

எனவே தொல்லியல் திணைக்களம் இவ்வாறான விடயங்களை கைவிடுதல் வேண்டும். தற்போதுள்ள சம நிலையை பேணி பாதுகாக்க வேண்டும் என தெரிவித்தார்.

யாழ் மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை பி. ஜெபரட்ணம் கருத்து தெரிவிக்கையில், மத நல்லிணக்கத்திற்கு எமது நாட்டில் முன் எப்போதும் இல்லாதவாறு பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ள காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

மற்ற மதங்களை மதிக்காத அன்பு செய்யாத ஏற்றுக்கொள்ளதா தன்மை எமது நாட்டில் தலைவிரித்தாடுகின்ற நிலை இருப்பது போல் தோன்றுகின்றது.

இதனால் பல்வேறு இடங்களில் பல்வேறு பிரச்சனைகளால் மதங்களுக்கிடையில் பிரிவினை ஏற்பட வாய்ப்பாக அமைகின்றது. இந்த நேரத்தில் நாம் எங்கள் மதத்தை எவ்வாறு மதிக்கின்றோமோ அதேபோல் ஏனைய மதங்களையும் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் எமது நாட்டில் பல இன மக்கள் ஒன்றாக வாழ்கின்றோம். இருந்த போதிலும் மக்களிடையே வேற்றுமைகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் திணிக்கப்படுகின்றன. அதாவது ஒரு இனம் வாழும் இடத்தில் அந்த இனத்திற்கு தேவையில்லாத அந்த இனத்திற்கு ஒவ்வாத மற்றோர் இனத்திற்கு தேவையான ஒரு விடயத்தினை செய்கின்ற போது மக்களுக்கிடையில் பிரிவினை ஏற்பட காரணமாகிவிடுகின்றது. ஆகவே ஒவ்வாரு இனத்தவரும் வசிக்கும் இடங்கள் மதிக்கப்பட வேண்டும்.

அவர்களுடைய கலாசார சமய விழுமிங்கள் மதிக்கப்பட்டு செயற்பாடுகள் இடம்பெறம்போது இவ்வாறான பிரிவினைகள் எற்படுவதனை தவிர்க்க முடியும் என தெரிவித்தார். இவ் ஊடக சந்திப்பில் பௌத்த, கிறிஸ்தவ, சைவ, இஸ்லாமிய மத குருமார்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# 111 மருந்துகளுக்கு தட்டுப்பாடு
# சுகாதார அமைச்சர் அதிர்ச்சி தகவல்



இலங்கையில் தற்போது 111 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். இதனையடுத்து குறித்த விடயத்தில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாட்டில் சுமார் 200 பொருட்களுக்கு தட்டுப்பாடு இருந்த நிலையில் தற்போது அது 111 ஆகக் குறைந்துள்ளது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அது 70 ஆகக் குறையும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

கடந்த ஆண்டை விட பொருளாதார நிலை வலுவடைந்துள்ளதாக தெரிவித்தார்.

எனினும் நிதியை விடுவிப்பதில் பெற்றுக் கொள்வதில் சில சிக்கல்கள் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கேஹலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

# எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்கள் 9 ஆம் தரத்தில்
# யாழ். மாவட்டத்தில் வெளியான அதிர்ச்சி தகவல்

யாழ்ப்பாணத்தில் 9 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். இப்படியான மோசமான நிலை யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது என்று பிரதேச செயலர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

பாடசாலையில் இடைவிலகிய மாணவர்களை மீளிணைத்தல் தொடர்பில் பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டும்போதே இந்த விடயத்தை தெரிவித்தனர்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீளவும் தரம் 9 இல் சேர்க்கும்போது அவர்களுக்கு எழுத, வாசிக்கத் தெரிவதில்லை. அவர்கள் அந்த வகுப்பிலே பேசாமல் இருக்கின்றனர். இவ்வாறு பல வகுப்புக்களில் நடைபெறுகின்றன என்று பிரதேச செயலர்கள் தெரிவித்தனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அவ்வாறு இடம்பெறுவதை ஏற்றுக்கொண்டனர். ஆரம்பக் கல்வி சரியாகப் பயிலாத மாணவர்களால் இந்த நிலைமை ஏற்படுவதாகக் குறிப்பிட்டனர்.

இதனைத் தீர்ப்பதற்கு பாடசாலைகளில் அவ்வாறான மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு ஆரம்பக் கல்வி போதிக்கப்படுகின்றது.

ஆனால் இது நடைமுறையில் முழுமையான சாத்தியமான விடயமல்ல என்றும் தெரிவித்தனர். மேலும் கொரோனா காரணமாக இவ்வாறு ஆரம்பக் கல்வியை முறையாகப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# அரச வீட்டு திட்டங்கள்..!
# யாழ் அரச அதிபரின் கோரிக்கையை நிராகரித்த கஜேந்திரகுமார் எம்.பி




அரச வீட்டு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட வீடுகளில் குடியமராத பயனாளிகளின் வீடுகளை திரும்பப் பெற வேண்டும் என்ற யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிராகரித்தார்.

புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இரண்டாவது கலந்துரையாடலில் அரசு அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்திக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்ட அரச வீட்டுத் திட்டங்களில் குடியமராதவர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்ட வீடு திட்ட வீடுகளில் சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகளில் பயனாளிகள் வாசிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பிரதேச செயலாளர் முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக சங்கானை தெல்லிப்பழை சண்டிலிப்பாய் மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களில் அதிகளவிலான வீடுகள் பயனாளிகள் என்று காணப்படுவதாக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அரச வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டதன் நோக்கத்தை பயனாளிகள் பூர்த்தி செய்யவில்லையாயின் அதனை மீளப் பெறுவதற்கு சுற்று நிருபம் இருப்பதாக தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், காணி வீடு இல்லாதவர்கள் அரச வீட்டு திட்டத்தை பெற்றுள்ள நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுத் திட்டங்களை மீளப் பெற முடியாது என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்பு குழு தலைவர் டக்ளஸ் தேவானந்தா, பலர் வீட்டு திட்டங்களுக்காக காத்திருக்கும் நிலையில் வழங்கிய வீட்டு திட்டங்களை பயன்படுத்தாதவர்களுக்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது எனக் கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதில் வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வீட்டுத் திட்டங்களை பெற்றவர்கள் தொழில் மற்றும் பிள்ளைகளின் கல்வி தேவை கருதி பிறிதொரு இடத்தில் வாழலாம் அதற்காக அவர்களின் திட்டங்களை மீள பெற முடியாது. ஒருவேளை அரச வீட்டுத் திட்டங்களுக்கு மேலதிகமாக வீடு மற்றும் காணிகள் உள்ளவர்களாயின் அதனை சரிவர ஆராய்ந்து மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் வீட்டு திட்டங்களில் குடி அமராதவர்களுக்கு மாற்று இடங்களில் வீடு காணிகள் இருக்கிறதா என ஆராய்ந்து விரிவான விபரங்களுடன் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.